**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.9** |
| **Name** | **:** | திரு. வினோத் |
| **Father's Name** | **:** | தேவராஜ் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.06.2023.**

முதல் விசாரணை -

நான் கொண்டையாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் நானும் மாயக்கிருஷ்ணனும் 12 வருடத்திற்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை முடி வெட்டுவதற்காக மாலை அருங்குணம் கூட்ரோட்டில் சென்றபோது என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். என்னுடன் மாயக்கிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் போட்டார்.

எதற்காக கையொப்பம் என்று கேட்டதற்கு போலிசார் விசாரணைக்கு வந்ததற்காக கையொப்பம் என்று சொன்னார்கள். பார்வை மகசரில் உள்ள

இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.11. முதல் கையொப்பம் மாயக்கிருஷ்ணனுடையது.

பத்து நிமிடம் காத்திருக்க சொன்னார்கள். அந்த பத்து நிமிடத்தில் மணி என்பவர் ஒரு ஆறு கொம்பு எடுத்து வந்தார். கொம்பு கொடுத்தற்காக கையொப்பம் போட சொன்னார்கள். அதற்கும் போட்டோம். அந்த கொம்பை பார்த்தால் அடையாளம் தெரியும். நீதிமன்றத்தில் உள்ளது தான் அது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை

10.8.2011 அன்று மாலை 3.30 மணிக்கு போலிசார் அருங்குணம் கூட்ரோட்டிடம் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்தபோது நானும் மாயக்கிருஷ்ணனும் சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு தற்போது விசாரணை என்று மட்டும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மணி என்பவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். தமிழ்மணியை தான் நான் மணி என்கிறேன் என்றால் மணி என்று தான் எனக்கு தெரியும். தமிழ்மணி என்று தெரியாது. சாட்சி தமிழ்மணியை தான் மணி என்று அழைக்கிறார் என்பதை எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தமிழ்மணியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து அடையாளம் காட்டினார்.

தமிழ்மணி நான் எல்லாம் செல்வராஜிற்கு வேண்டப்பட்டவர்கள்

**என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.